# *யான் கண்ட மூர்த்திகள்!*

மூர்த்தி எனும் பெயரைக் கொண்டே,
முழுதாய் ஒரு கவிதை செய்யும்,
எண்ணம் அதுவும் எழுந்து நிறைய,
கண்ணில் மனத்தில் கருத்தில் நிறைந்த,

எண்ணிலடங்காய் பெயர்கள் தோன்ற,
இதயம் நிறைந்து மலரும் கவிதை!
அன்று ஒருநாள் **குமார்** என்னும்
அறிந்த பெயர்கள் யாவும் தொகுத்தேன்,

அடுத்து, நெஞ்சில் நின்ற **சேகர்கள்** ஆக,
இன்றோ எனது படைப்பில் முகிழும்
**மூர்த்தி** எனும் பெயர்களின் தொகுப்பே!
பள்ளியின் தோழனாய் குரு என்னும்,

**குருதெஷ்ணா மூர்த்தி**யில் தொடங்க,
ஒட்டகுடியில் ஸ்தபதியார் **சுந்தரமூர்த்தி,**
அவர்தம் ஒருமகன் **சத்திய மூர்த்தி!**
நடேசனின் ஒருமகன் **சுந்தர மூர்த்தி,**

அடுத்து ஆசாரம் எனும் **கணேச மூர்த்தி!**
அடுத்து தமிழரசன் தம்பி **கிருஷ்ணமூர்த்தி!**
பள்ளியில் ஆசிரியர் **சுந்தர மூர்த்தி!**
சார்ப்பு காரர் **தெஷ்ணா மூர்த்தி!** மில்கலிய

பெருமாளவர் மைத்துனர்**தெஷ்ணாமூர்த்தி!**
ரயில்வே கார்டு **சுந்தரமூர்த்தி** என்பவரோடு
வடகரை குடும்பத்து **இராம மூர்த்தி** ஈறாக,
இன்னும் சில மூர்த்திகள் தானுண்டு!

போரூர் பெருமகன் உறவினர் **சுந்தரமூர்த்தி!**
போரூரில் தங்கையின் கணவர் **வேதமூர்த்தி!**
புதுக்கோட்டை ஞானாலயா எனும் நூலகம்
கண்ட மாமா காவாலகுடி **கிருஷ்ணமூர்த்தி!**

சுங்கத்துறையில் நுழைந்த காலை, கண்ணில்
பட்ட நண்பர் காரைக்கால் **கலியமூர்த்தி!**
தணிக்கைத் துறையில் ஒரு**சுந்தர மூர்த்தி!**
காசுத்துறை புகழ் **சாம்பமூர்த்தி, ராமமூர்த்தி!**

எனதறிவிலும் அன்பிலும் என்றும் நிறையும்,
வடிவன் என்னும் **ஸ்ரீனிவாச மூர்த்தி** யவரோ,
எழுத்தும் அறிவும் இயைந்து சீராய்
என்றும் பயணிக்கும் படைப்பாளி ஆவார்!

கல்லூரியில் கண்ட நண்பர் **குருமூர்த்தி!**
சுங்கத்துறையில் இன்னும் சிலருண்டு!
மதிப்பீட்டு அதிகாரிகளாக **ஏ.ஜி.கே.,**
**கே.ஆர்.கே மூர்த்திகளோடும்** கிட்டு

என்னும் **கிருஷ்ண மூர்த்தி**யுடன், நடிகர்,
**கிருஷ்ண மூர்த்தி** நினைவில் நிற்பார்!
அன்பின் நண்பர் அதிகாரி **விஜய மூர்த்தி!**
அடுத்து **நாராயண மூர்த்தி!**அன்பின் **ஜே.கே.**

**சத்திய மூர்த்தி** யுடன்,இன்னொரு **சத்திய**
**மூர்த்தி,** தோழி பரணி **கிருஷ்ண மூர்த்தி**,
மீனம்பாக்கத்தில் கண்ட **விநாயக மூர்த்தி!**
**பிரசாத்** ஸ்டுடியோவின் **மூர்த்தி** யுடனே,

**ஏஸ் கார்கோ மூர்த்தி** என இன்னும்சில
மூர்த்திகளை பணியின் ஊடே கண்டதுண்டு!
பக்கத்தில் வசந்தம் நகர் வாழும்சீலர்,
**மந்திரமூர்த்தி,** சக்குளத்தில் கண்ட **மூர்த்தி!**

சங்கரின் மைத்துனர் **குருமூர்த்தி** எனவாய்
தொகுத்து நிறைந்தேன் மூர்த்திகளாக!
இன்னும் சிலர்தாமும் நினைவில் வந்தால்,
இணைத்து தொகுத்து வைத்து மகிழ்வேன்!

\- **கவிவளவன்**

06/15-05-2023 (நள்ளிரவு 12.15)

